## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

நாள் 20.11.2025

அசல் வழக்கு எண். 176/2019

வா.சா. 1. –அஞ்சலி , க/பெ. முருகன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எந்த சொத்துக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் தாத்தா சொத்துக்காக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாத்தாவினுடைய பெயர் தெரியுமா என்றால் செங்காளி நாயக்கர் ஆவார். இரண்டு ஐட்ட சொத்துக்காக பாகம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் சொத்து விவரங்கள் வழக்கறிஞரிடம் சொல்லப்பட்ட பிறகு தான் வழக்கு தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து மூதாதையர் சொத்து என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் வழக்கறிஞர் இடம் கொடுத்தேன். அவ்வாறு நீங்கள் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. நீங்கள் என்ன படித்தீர்கள் என்றால் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். உங்களை யார் படிக்க வைத்தது என்றால் அப்பா தான் படிக்க வைத்தார். முதல் பிரதிவாதி கன்னியப்பன் உங்கள் அப்பா என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி சண்முகம் மூன்றாம் பிரதிவாதி ஆனந்தன் யார் என்றால் என்னுடைய உடன் பிறந்த அண்ணன்கள் ஆவார்கள். கிருஷ்ணவேணி மற்றும் கலைச்செல்வி உங்களுடைய அக்கா என்றால் சரிதான். உங்களுடைய சகோதர சகோதரிகளுக்கு யார் திருமணம் செய்து வைத்தது என்றால் அவர்களுக்கு

அப்பா மற்றும் அம்மா செய்து வைத்தார்கள். நீங்கள் உங்கள் விருப்பப்படி காதல் திருமணம் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். நீங்களும் பிரதிவாதிகளும் வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததாக கூறியுள்ளீர்கள் அவ்வாறு நீங்கள் இருக்கவில்லை என்றால் சரியில்லை. வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. தற்பொழுது உங்கள் வயது என்ன என்றால் 36 ஆகிறது. முதல் பிரதிவாதி கன்னியப்பன் உங்கள் அப்பா வழக்கு சொத்தை எவ்வாறு சம்பாதித்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் பூர்விக சொத்து தான் தாத்தாவினுடைய சொத்தாகும். தாத்தா செங்காளி மீது சொத்து உள்ளது என்று காட்டுவதற்கு ஆவணம் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. முதல் ஐட்ட சொத்தின் சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. மொத்தம் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் தாத்தா பெயரில் இருந்தது என்றால் 9 ½ ஏக்கர் என்று சொன்னார்கள். வழக்கு சொத்துக்களை முதல் பிரதிவாதி இரண்டு, மூன்று பிரதிவாதிகளுக்கு ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார். இரண்டாவது ஐட்ட சொத்துக்கள் மூன்றாம் நபருக்கு விற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து வெண்ணிலா என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியில்லை. குமார் சன் ஆப் சசிகுமார் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஐட்டம் இரண்டாவது சொத்தில் உரிமையாளர் பிரியா பார்த்திபன் ஆகியோர் என்றால் தெரியாது. அவர்களை இந்த வழக்கில் நீங்கள் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியில்லை. ஆகவே நீங்கள் இந்த வழக்கில் கோரி உள்ள பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கது அல்ல என்றாலும் சரி இல்லை. பாகப்பிரிவினை கோருவதற்கு நீங்கள் தகுதியான ஆள் இல்லை என்றால்

**சரியில்லை. முதல் பிரதிவாதி இரண்டு, மூன்று பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லும் என்றாலும் சரி இல்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram